தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984 மார்ச் 26, திங்கட்கிழமை

பங்குனி 13, ருத்ரோத்காரி-திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்து''.

நோயில்லாது இருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்;

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள நிர்வாக ஆலோசனைத் திட்டம்.

437— (*வினா எண் 12251) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசு தொடங்கிய நிர்வாக ஆலோசனைத் திட்டத்தின் கீழ் 1979-ம் ஆண்டிலிருந்து இதுவரை அரசுக்கு வரப்பெற்றுள்ள ஆலோசனைகள் எத்தனை?

(ஆ) பரிசு வழங்கப்பட்ட ஆலோசனைகள் எத்தனை?

(இ) அவை என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 326 ;

(ஆ) 2.

(இ) (i) சேலம், அரசு வட்டார அச்சகத்தின் இளநிலை இயந்திரக் கம்மியர் திரு. வி. மாணிக்கம் அவர்கள் பட்டைகளை இணைப்பதற்கு கொக்கிகளைப் பயன்படுத்துவதற்கு பதிலாக

பசையைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனைக் குறிப்பை அளித்தார். இதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ரூ. 575 செலவு மிச்சம் ஏற்படுகிறது. எனவே, அவருக்கு ரொக்க ஊக்கத் தொகை அளிக்கலாம் என்று எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் அவருக்கு ரூ. 200 மட்டும் இத்திட்டத்தின் கீழ் 1982-ம் ஆண்டு பரிசாக வழங்கப் பட்டது.

(ii) ஒப்பந்தப் புள்ளி (Tender) கொடுக்கப்படும் பொழுது செலுத்தப்படும் வைப்புத் தொகையை டெண்டர்கள் பிரிக்கப்பட்டு அதே நாளில் அவைகளின் மீது முடிவு எடுக்கப் படும்பொழுது அன்றே வைப்புத் தொகையை திரும்ப கொடுக் கப்பட வேண்டும் என வழிமுறைகள் உள்ளன. ஒப்பந்தப் புள்ளி பிரிக்கப்படும் நாளுக்கு சில தினங்கள் கழித்து அவைகளின் மேல் முடிவு எடுக்கப்பட்டாலும் வைப்புத் தொகையை திருப்பி கொடுப்பதில் மேற்கண்ட வழிமுறை களை கடைப்பிடிக்க வேண்டும் என திருச்சி சிறை கட்டிடங்கள் வட்ட கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு. கே. ஆர். ஈஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ள ஆலோசனையை அரசு ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊக்கம் தரும் வகையில் தகுதி சான்றிதழ் (Merit Certificate) அளித்துள்ளது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரிசு இரண்டு பேர்களுக்கு வழங்கப்பட்ட தாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்கு நம்முடைய அரசினுடைய கோப்புகள் துரிதமாக நகருவதற்கு அப்படிப்பட்ட ஆலோசனைகள் ஏதாவது வரப்பெற்று இருக்கிறதா? அப்படிப்பட்ட ஆலோசனைகள் வருவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இன்னும் இந்தத் தொகையை அதிகமாக கூட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட ஆலோசனை களில் அப்படிப்பட்ட ஆலோசனைகள் இருக்கிறதா, இல்லையா என்ற விவரக்குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால் அதுபற்றி சிறந்த ஆலோசனைகளை எடுத்துச் சொல்லி, அரசுக்கு வழிவகைகள் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை ஏற் படுத்துவார்களானால், அதுபற்றி அரசு ஏற்றுக்கொள்ளக் கூடும். அந்த வகையில் அவரவர்கள் செய்கின்ற அத்தகைய சிபாரிசுகளின் அடிப்படையில், சிக்கனம் ஏற்படுத்தவும் விரை வாக காரியங்கள் நடைபெறவும், சிறப்பாக காரியங்கள்

1984 மார்ச் 26]

நடைபெறவும், அதிலே வீணாக்குதல், கெடுதல்கள் இல்லாது தவிர்க்கும் முறையில், சிறந்த ஆலோசனைகளின் பேரில், அதனால் நமக்கு ஏற்படுகின்ற வருவாயைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நாம் பரிசுத் தொகை வழங்கவும், அதிலே உச்சகட்டமாக ஆயிரம் ரூபாய் வரையிலும் நாம் கொடுக்கலாம் என்று இப்போது வைத்திருக்கிறோம். அதுவும், ஏற்கெனவே அரசுத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் இப்படிப்பட்ட ஆலோசனைகளைத் தரலாம் என்று இருந்தது. அண்மையிலே அரசுத்துறையில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், பொதுமக்களாக இருப்பவர்களில் கூட, ஆலோசனைகள் சொல்வார்களேயானால், அப்படிப்பட்ட ஆலோசனைகள் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ந. சிவஞானம் : தனியார்களுக்கு கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைகளை ஏற்கெனவே அரசுத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் தரவேண்டும் என்ற முறையிலே முதலிலே விதி இருந்தது. இப்போது பொது மக்களில் யாரும் எந்தத் துறையைப்பற்றியும் எந்த ஆலோசனைகளையும் தரலாம் என்ற முறையிலே ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஏற்பாடுகளை தனியார் துறைகளிலே அந்த அந்தத் துறைகளில் வைத்து இருக்கிறார்கள். அந்த அந்த நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்கள் சிறந்த ஆலோசனைகளைச் சொல்லிய காரணத்தினால் அந்த நிறுவனங்களுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் லாபம் ஈட்டித்தருகிற நிலைமை வருகிறபோது அப்படி ஆலோசனை தந்தவர்களுக்கு இன்சன்டிவ் தருகிற முறை பிற நாடுகளிலே ஜப்பான் போன்ற நாடுகளிலே வைத்திருக்கிறார்கள், ஏராளமான ஆலோசனைகளை பெறுகிறார்கள், நல்ல ஆலோசனைகளைத் தருகிறவர்களுக்கு ஏராளமான பரிசுகளைத் தருகிறார்கள். இங்கே தனியார் நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் ஊக்கம் தருகின்ற முறையிலே முயற்சிகளை மேற்கொள்வார்களானால் அவர்களுடைய அனுபவத்தை வைத்து அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் தருகின்ற ஆலோசனைகளை பெறுகின்ற முயற்சிகளை மேற்கொள்வார்களானால் சிறந்த ஆலோசனைகள் வரக்கூடும். அரசுக்கும் நல்ல ஆலோசனைகள் வருமானால் மிக மிக நல்லது. ஆனால் நமக்கு இப்போது வருகிற ஆலோசனைகள் மிகமிகக் குறைவு. சிறந்த ஆலோசனைகளும் அவ்வளவாக வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆண்டிற்கு ஐந்து ஆலோசனைகள் வரையில்தான் தரலாம் என்று வைத்து இருக்கிறார்கள். சிறந்த ஆலோசனைகளைப் பெறுகின்ற முறையிலே எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் எத்தனை ஆலோசனைகளை வேண்டுமானாலும் பெறுகிற அளவுக்கு

அதற்கு வைத்திருக்கிற ஒரு வரைமுறையை நீக்கலாம் என்று நானே கருதிக் கொண்டிருக்கிறேன். ஆகவே அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளிலே அப்படிப்பட்ட முறை பரவலாக இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற ஏற்பாட்டின் மூலமாக பொதுமக்களும் மற்றவர்களும் விரிவாகச் சொல்கிறார்கள். உதாரணமாக ஜப்பான் நாட்டிலே உள்ள டயாட்டோ நிறுவனத்திற்கு ஒரு வருஷத்தில் ஐந்து லட்சம் ஆலோசனைகள் வருகின்றன. அதிலே 5 ஆயிரம் ஆலோசனைகளுக்கு பரிசுகள் வழங்குவதாகச் சொன்னார்கள். அங்கே சஜஷன் பாக்ஸ் வைக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல இங்கேயும் கட்டாயமாக தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் சஜஷன் பாக்ஸ் வைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அந்த முறையினை இந்த நாட்டிலும் உள்ளபடியே ஊக்கப்படுத்தவேண்டும். குறிப்பாக அரசு சார்பில் நடத்தப்படுகிற பொது நிறுவனங்களிலும் அரசுத்துறையும் தனியார் துறையும் சேர்ந்து நடத்துகின்ற கூட்டு நிறுவனங்களிலும் சிறந்த ஆலோசனைகள் வருமேயானால் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ நல்ல வருவாயை லாபத்தை ஈட்டித் தரவோ நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். ஜப்பான் நாட்டிலே எல்லா நிறுவனங்களிலேயும் சிறந்த ஊக்கத் தொகை அதற்காகத் தரப்படுகிறது. இந்த முறை மேல்நாடுகளிலேயும் இருக்கிறது. ஒரு தொழிலாளி சிறந்த ஆலோசனையைச் சொல்லி அதன்மூலமாக பல லட்சக்கணக்கான ரூபாய் அந்த நிறுவனத்திற்கு லாபம் வருமேயானால் அவனுக்கு பரிசு கொடுப்பதோடு அவனுடைய படத்தை அங்கே போட்டு அவனுடைய ஆலோசனையினால் தான் இந்த நிறுவனத்திற்கு இவ்வளவு பெரிய லாபம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியப்படுத்திவிடுகிறார்கள். இது மற்றத் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தருகிறமுறையில் அமைந்திருக்கிறது. அந்த முறை தமிழகத்திலே உள்ள பொது நிறுவனங்களாலும் கடைப்பிடிக்கப்படுமானால் சட்டமன்ற உறுப்பினர்களும் நானும் எடுத்துச் சொன்னதின் அடிப்படையில் மிக முனைப்போடு செயல்படுவார்களேயானால் தமிழகத்திலே தொழில் திறனும் தொழில் நுட்பத்திறனும் மேலும் வளருவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 448 மற்றும் 449 சேர்த்து எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.